**28.03.2025–ந் தேதி நடைபெற்ற அவசரக்கூட்ட நடவடிக்கையின் நகல்**

**<u>தேவகோட்டை நகராட்சி</u>**

**அவசர க்கூட்டம்**

தேவகோட்டை நகராட்சியில் நகர்மன்ற அவசரக்கூட்டம் 28.03.2025-ம் தேதி வெள்ளிக்கிழமை நன்பகல் 4.00 மணிக்கு நகர்மன்ற கூட்ட அரங்கில் நடைபெறவுள்ளது. அவ்வமயம் கீழ்க்கண்ட பொருட்கள் விவாதத்திற்கு எடுத்துக்கொள்ளப்படுகிறது. தாங்கள் இக்கூட்டத்தில் கலந்து கொள்ள வேண்டுமாய் அன்புடன் கேட்டுக்கொள்கிறேன்.

(ஒப்பம்) கா. சுந்தரலிங்கம்
நகர்மன்ற தலைவர்,
தேவகோட்டை நகராட்சி.

**<u>பொருள் – 50</u>**

இந்நகராட்சிக்கு சொந்தமான மூன்றாண்டு குத்தகை உரிம இனங்கள் (2025-2026 முதல் 2027-2028 முடிய) பொது ஏலம்/ஒப்பந்தப்புள்ளி கோரியதின் பேரில் 29.01.2025 அன்று நடைபெற இருந்த பொது ஏலம்/ஒப்பந்தப்புள்ளி நடவடிக்கை நிர்வாக நலன் கருதி ஒத்திவைக்கப்பட்டது. அதனை தொடர்ந்து 14.03.2025-ல் நடைபெற இருந்து பொது ஏலம்/ ஒப்பந்தப்புள்ளியில் எவரும் கலந்து கொள்ளப்படவில்லை. மீண்டும் குறுகியகால மறு பொதுஏலம்/ஒப்பந்தப்புள்ளி 25.03.2025 தேதி செவ்வாய்கிழமை நடைபெற்றதின் நடவடிக்கை மன்றத்தின் பார்வைக்கும், அனுமதிக்கும் வைக்கப்படுகிறது.

1. கால்நடை சந்தை வசூல் உரிமம்.

ஏல விவரம்

| வ. எண் | பெயர் (ம) முகவரி<br>திரு / திருமதி | ஏலம் கோரிய தொகை<br>ரூ. |
|---|---|---|
| (1) | (2) | (3) |
| 1 | திரு.கரு.முத்துப்பாண்டி த/பெ கருப்பையா,<br>செங்கற்கோவிலார் தெரு, தேவகோட்டை | 8,10,000/- |
| 2 | திரு.பெரி.சுப்பிரமணியன் த/பெ. பெரியசாமி<br>9,நித்தியகல்யாணிபுரம், தேவகோட்டை. | 8,01,000/- |

2.வாரச்சந்தை வசூல் உரிமம்.

ஏல விவரம்

| வ. எண் | பெயர் (ம) முகவரி<br>திரு / திருமதி | ஏலம் கோரிய தொகை<br>ரூ. |
|---|---|---|
| 1 | பொது ஏலம் / ஒப்பந்தப்புள்ளிக்கு எவரும் விண்ணப்பிக்கவில்லை. | ஏலத்தில் கலந்து கொள்ளவில்லை |

3. ஆடு அடிக்கும் தொட்டி வசூல் உரிமம்

ஏல விவரம்

| வ. எண் | பெயர் (ம) முகவரி திரு / திருமதி | ஏலம் கோரிய தொகை ரூ. |
|---|---|---|
| (1) | (2) | (3) |
| 1 | திரு. மு.நல்லதம்பி த/பெ. முனியாண்டி, 53, புதூர் அக்ரஹாரம், தேவகோட்டை | ரூ.1,83,000 |
| 2 | திரு.பூ.பொன்னுச்சாமி த/பெ பூச்சி 86/1, கண்டதேவி ரோடு, தேவகோட்டை. | ரூ.1,80,500 |

4. நகராட்சிக்கு சொந்தமான பேருந்து நிலையத்திற்கு வரும் பேருந்துகளுக்கு கட்டணம் வசூல் செய்து கொள்ளும் உரிமம்

ஏல விவரம்

| வ. எண் | பெயர் (ம) முகவரி திரு / திருமதி | ஏலம் கோரிய தொகை ரூ. |
|---|---|---|
| (1) | (2) | (3) |
| 1 | பொது ஏலம் / ஒப்பந்தப்புள்ளிக்கு எவரும் விண்ணப்பிக்கவில்லை. | ஏலத்தில் கலந்து கொள்ளவில்லை |

5. இருசக்கர வாகனம் நிறுத்துமிடம் .

ஏல விவரம்

| வ. எண் | பெயர் (ம) முகவரி திரு / திருமதி | ஏலம் கோரிய தொகை ரூ. |
|---|---|---|
| (1) | (2) | (3) |
| 1 | திரு.PRS.பாண்டியன், த/பெ. சுப்பிரமணியன் 9, நித்தியகல்யாணிபுரம், தேவகோட்டை. | ரூ.8,01,000 |
| 2 | திரு.KR.பாண்டித்துரை த/பெ. கருப்பையா, 128இ, சரஸ்வதிவாசக சாலை தெரு, தேவகோட்டை. | ரூ.7,90,000 |

6. தினசரி சந்தை வசூல் உரிமம்

ஏல விவரம்

| வ. எண் | பெயர் (ம) முகவரி திரு / திருமதி | ஏலம் கோரிய தொகை ரூ. |
|---|---|---|
| (1) | (2) | (3) |
| 1 | பொது ஏலம் / ஒப்பந்தப்புள்ளிக்கு எவரும் | ஏலத்தில் கலந்து |

| | | |
|---|---|---|
| | விண்ணப்பிக்கவில்லை. | கொள்ளவில்லை |

7. சாலையோர கடைகள் வசூல் உரிமம்.

ஏல விவரம்

| வ. எண் | பெயர் (ம) முகவரி திரு / திருமதி | ஏலம் கோரிய தொகை ரூ. |
|---|---|---|
| (1) | (2) | (3) |
| 1 | பொது ஏலம் / ஒப்பந்தப்புள்ளிக்கு எவரும் விண்ணப்பிக்கவில்லை. | ஏலத்தில் கலந்து கொள்ளவில்லை |

8. இராம்நகர் கட்டணக்கழிப்பறை வசூல்.

ஏல மற்றும் ஒப்பந்தப்புள்ளி விவரம்

| வ. எண் | பெயர் (ம) முகவரி திரு / திருமதி | ஏலம் கோரிய தொகை ரூ. |
|---|---|---|
| (1) | (2) | (3) |
| 1 | பொது ஏலம் / ஒப்பந்தப்புள்ளிக்கு எவரும் விண்ணப்பிக்கவில்லை. | ஏலத்தில் கலந்து கொள்ளவில்லை |

| <u>அலுவலக குறிப்பு:-</u> | | |
|---|---|---|
| இனம் எண்.1-க்கு | | கால்நடை வசூல் உரிமத்திற்கு திரு கரு.முத்துப்பாண்டி த/பெ கருப்பையா என்பவர் உயர்ந்த பட்ச ஏலக் கேள்வி ரூ.8,10,000/-க்கு ஏலம் கோரியுள்ளார் கடந்தாண்டு மற்றும் மூன்றாண்டு சராசரி தொகையைவிட ரூ.20,000/-க்கு கூடுதலாக ஏலம் கோரியுள்ளதால் அன்னாருக்கு 2025-2026 முதல் 2027-2028 முடிய மூன்றாண்டுகளுக்கு கட்டணம் வசூலிக்கும் உரிமத்தை வழங்க மன்றம் அனுமதிக்கலாம். |
| இனம் எண்.2-க்கு | | பொது ஏலம் / ஒப்பந்தப்புள்ளிக்கு எவரும் கலந்து கொள்ளவில்லை. எனவே, மறு பொது ஏலம் / ஒப்பந்தபுள்ளி கோர மன்றம் அனுமதிக்கலாம். |
| இனம் எண்.3-க்கு | | ஆடு அடிக்கும் வசூல் உரிமத்திற்கு திரு மு.நல்லதம்பி த/பெ முனியாண்டி என்பவர் உயர்ந்த பட்ச ஏலக் கேள்வி ரூ.1,83,000/-க்கு ஏலம் கோரியுள்ளார் கடந்தாண்டு மற்றும் மூன்றாண்டு சராசரி தொகையைவிட ரூ.8,000/-க்கு கூடுதலாக ஏலம் கோரியுள்ளதால் |

| | | |
|---|---|---|
| | | அன்னாருக்கு 2025-2026 முதல் 2027-2028 முடிய மூன்றாண்டுகளுக்கு கட்டணம் வசூலிக்கும் உரிமத்தை வழங்க மன்றம் அனுமதிக்கலாம். |
| இனம் எண்.4-க்கு | | பொது ஏலம் / ஒப்பந்தப்புள்ளியில் ஒரு நபர் மட்டுமே ஏலத்தில் கலந்து கொண்டார் ஏல கேள்வி கோரவில்லை. எனவே, மறு பொது ஏலம் / ஒப்பந்தபுள்ளி கோர மன்றம் அனுமதிக்கலாம். |
| இனம் எண்.5-க்கு | | இரு சக்கர வாகன நிறுத்துமிடம் வசூல் உரிமத்திற்கு திருPRS.பாண்டியன் த/பெ. சுப்பிரமணியன் என்பவர் உயர்ந்த பட்ச ஏலக் கேள்வி ரூ.8,01,000/-க்கு ஏலம் கோரியுள்ளார் கடந்தாண்டு மற்றும் மூன்றாண்டு சராசரி தொகையைவிட ரூ.21,000/-க்கு கூடுதலாக ஏலம் கோரியுள்ளதால் அன்னாருக்கு 2025-2026 முதல் 2027-2028 முடிய மூன்றாண்டுகளுக்கு கட்டணம் வசூலிக்கும் உரிமத்தை வழங்க மன்றம் அனுமதிக்கலாம். |
| இனம் எண்.6-க்கு | | பொது ஏலம் / ஒப்பந்தப்புள்ளியில் கலந்து கொண்ட நபர்கள் ஏல கேள்வி கோரவில்லை. எனவே, மறு பொது ஏலம் / ஒப்பந்தபுள்ளி கோர மன்றம் அனுமதிக்கலாம். |
| இனம் எண்.7-க்கு | | பொது ஏலம் / ஒப்பந்தப்புள்ளியில் கலந்து கொண்ட நபர்கள் ஏல கேள்வி கோரவில்லை. எனவே, மறு பொது ஏலம் / ஒப்பந்தபுள்ளி கோர மன்றம் அனுமதிக்கலாம். |
| இனம் எண்.8-க்கு | | பொது ஏலம் / ஒப்பந்தப்புள்ளியில் கலந்து கொண்ட நபர்கள் ஏல கேள்வி கோரவில்லை. எனவே, மறு பொது ஏலம் / ஒப்பந்தபுள்ளி கோர மன்றம் அனுமதிக்கலாம். |

**தீர்மானம் 50 - அனுமதிக்கப்பட்டது .**

--

## பொருள் – 51

சிவகங்கை மாவட்டம், தேவகோட்டை நகராட்சி வருவாய் பிரிவின் கீழ் 2025-2028 மூன்றாண்டுக்க குறுகிய கால மறு பொது ஏலம் மற்றும் ஒப்பந்தபுள்ளி அறிவிப்பினை தினமணி நாளிதழில் வெளிட்ட வகையில் அதற்கான கட்டணம் ரூ.35,633/- ஐ "EXPRESS PUBLICATIONS" மன்ற நிறுவனத்திற்கு வழங்க மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

<u>அலுவலக குறிப்பு :-</u>

மன்றம் அனுமதிக்கலாம்.

**தீர்மானம் 51 - அனுமதிக்கப்பட்டது .**

--

## பொருள் – 52

சிவகங்கை மாவட்டம், தேவகோட்டை நகராட்சி பொதுசுகாதார பிரிவின் கீழ் தொழில் உரிம கட்டத்திற்கான புதிய கட்டணத்தை மாவட்ட அரசிதழில் வெளியிட ஒரு பக்கத்திற்கு ரூ.3000/- வீதம் 15 பக்கத்திற்கு ரூ.45000/- செலவீனம் ஆகும். மேற்காணும் செலவீனத்தை பொது நிதியில் செலவு மேற்கொள்ள மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலக குறிப்பு :—**

மன்றம் அனுமதிக்கலாம்.

**தீர்மானம்** 52 - **அனுமதிக்கப்பட்டது .**

—

## பொருள் – 53

தேவகோட்டை நகராட்சிக்கு சொந்தமான 10-வது தொகுதி நகராட்சி நடுநிலைப்பள்ளியில் அதிக மாணவர்களின் படித்து வருகின்றனர். வருடத்திற்கு வருடம் மாணவர்களின் சேர்க்கை அதிகமாக உள்ளதால் போதிய இடவசதி இல்லாத காரணத்தினால் பள்ளியில் கூடுதலாக ஒரு வகுப்பறை கட்டிடம் அமைக்க வேண்டியது அவசியமாகிறது. நகராட்சி பள்ளியாக இருப்பதால் மாணவர்களின் நலன் கருதி புதிய கட்டிடம் கட்டிட தயார் செய்யப்பட்டுள்ள மதிப்பீடு ரூ.10,00,000/- இலட்சத்திற்கு மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலக குறிப்பு :—**

அ) மன்றம் அனுமதிக்கலாம்.

ஆ) மேற்காணும் பணிக்கான செலவீனத்தை கல்விநிதியில் மேற்கொள்ள மன்றம் அனுமதிக்கலாம்.

**தீர்மானம்** 53 - **அனுமதிக்கப்பட்டது .**

—

## பொருள் – 54

தேவகோட்டை நகராட்சிக்கு சொந்தமான 9-வது தொகுதி நகராட்சி தொடக்கப்பள்ளியில் சுமார் 50 மாணவர்கள் படித்து வருகின்றனர். பள்ளியின் முன்பகுதி மற்றும் சுற்றிலும் புதர்கள் மண்டி கிடப்பதால் விஷ ஜந்துக்கள் வருவதற்கு வாய்ப்பு உள்ளது. எனவே மாணவர்களின் நலன் கருதி சுற்றிலும் சுத்தம் செய்து பேவர் பிளாக் தரைதளம் மற்றும் பள்ளிக்கு நாடக மேடை ஒன்றும் அமைக்க தயார் செய்யப்பட்டுள்ள மதிப்பீடு ரூ.9,00,000/- இலட்சத்திற்கு மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலக குறிப்பு :—**

அ) மன்றம் அனுமதிக்கலாம்.

ஆ) மேற்காணும் பணிக்கான செலவீனத்தை கல்விநிதியில் மேற்கொள்ள மன்றம் அனுமதிக்கலாம்.

**தீர்மானம்** 54 - **அனுமதிக்கப்பட்டது .**

—

## பொருள் – 55

தேவகோட்டை நகராட்சிக்கு சொந்தமான 6-வது வார்டு நகராட்சி தொடக்கப்பள்ளியில் அதிக அளவில் மாணவர்கள் படித்து வருகின்றனர். பள்ளி வகுப்பறையில் தற்போது மாணவர்கள் பயன்படுத்தி வரும் டேபிள், நாற்காலிகள் அதிக அளவு பழுதடைந்து உள்ளது. எனவே மாணவர்களின் நலன் கருதி புதிய டேபிள், நாற்காலிகள் மற்றும் கரும்பலகைகள் வாங்க தயார் செய்யப்பட்டுள்ள மதிப்பீடு ரூ.5,00,000/- இலட்சத்திற்கு மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலக குறிப்பு :–**

அ) மன்றம் அனுமதிக்கலாம்.

ஆ) மேற்காணும் பணிக்கான செலவீனத்தை கல்விநிதியில் மேற்கொள்ள மன்றம் அனுமதிக்கலாம்..

**தீர்மானம் 55 - அனுமதிக்கப்பட்டது .**

--

## பொருள் – 56

தேவகோட்டை நகராட்சிக்கு சொந்தமான 14-வது தொகுதி நகராட்சி தொடக்கப்பள்ளியில் மாணவர்களின் எண்ணிக்கை வருடத்திற்கு வருடம் அதிகரித்து வருகின்றது. பள்ளி இயங்கி வரும் கட்டிடம் தற்போது படிக்கும் மாணவர்களுக்கு போதுமானதாக இல்லை. எனவே கூடுதலாக புதிய வகுப்பறை கட்டிடம் அமைக்க வேண்டியது அவசியமாகிறது. எனவே மாணவர்களின் நலன் கருதி புதிய வகுப்பறை கட்டிடம் கட்டிட தயார் செய்யப்பட்டுள்ள மதிப்பீடு ரூ. 7,00,000/- இலட்சத்திற்கு மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலக குறிப்பு :–**

அ) மன்றம் அனுமதிக்கலாம்.

ஆ) மேற்காணும் பணிக்கான செலவீனத்தை கல்விநிதியில் மேற்கொள்ள மன்றம் அனுமதிக்கலாம்.

**தீர்மானம் 56 - அனுமதிக்கப்பட்டது .**

--

## பொருள் – 57

தேவகோட்டை நகராட்சி பொது சுகாதாரப்பிரிவின் கீழ் திடக்கழிவு மேலாண்மை பணிகள் நடைபெற்று வருகின்றது. நாள்தோறும் 17.85 MT குப்பைகள் சேகரிக்கப்பட்டு 9 MT மக்கும் குப்பைகள் தரம் பிரிக்கப்பட்டு அவைகள் 3 நுண்ணுர செயலாக்க மையங்களில் அறைக்கப்பட்டு இயற்கை உரங்களாக தயாரிக்கப்பட்டு வருகின்றனர். இந்நிலையில் மேற்கண்ட 3 மையங்களில் (ராம்நர், சருகனி ரோடு, புதூர் அக்ரஹாரம்) உள்ள Pulverized machine – 3. Sieving machine – 2 மற்றும் Non soluble plastics கட்டுவதற்காக பயன்படும் Baling machine – 3. Weighing machine – 3. இவ்வியந்திரங்கள் அடிக்கடி பழுது ஏற்படுவதால் இயற்கை உரம் தயாரிக்கும் பணி தொய்வடையும் சூழ்நிலை உள்ளது. மேலும் கொசுஒழிப்பு பணிக்காக பயன்படுத்தப்படும் புகைப்புப்பான் இயந்திரம் Fogging machine கள் முறையே Vehicle mounted fogging machine – 1. Pulse fogg – 2. Hand fogg

machined – 5 இவியந்திரங்களும் அடிக்கடி பழுது ஏற்படுவதால் கொசுக்களால் பரவும் நோய்களை கட்டுப்படுத்த இயலாத சூழ்நிலை இருந்து வருகிறது.

எனவே மேற்கண்ட திடக்கழிவு மேலாண்மை பணிக்கு பயன்படுத்தப்படும் இயந்திரங்கள் -8 மற்றும் fogging machine வகையில் 8 இவ்வியந்திரங்கள் பழுது நீக்கம் செய்ய வருடாந்திர பழுது நீக்க பராமரிப்பு பணிக்களை மேற்கொள்ள Annual maintenance contract முறையில் குறைந்த விலைப்புள்ளி அடிப்படையில் அல்லது Tender செயல்முறைப்படி நடைமுறைப்படுத்த ஆண்டு ஒன்றிற்கு ஆதாவது January 2025 முதல் December 2025 வரை நடைமுறை படுத்த உத்தேச செலவீனம் ரூ.400000/- ( நான்க இலட்சங்கள்) ஆகும். எனவே மன்றத்தின் முன் அனுமதி பெற்று உரிய நடவடிக்கைகளை மேற்கொள்ள மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

<u>அலுவலக குறிப்பு :–</u>

மன்றம் அனுமதிக்கலாம்.

**தீர்மானம் 57 - அனுமதிக்கப்பட்டது .**

––

## <u>பொருள் – 58</u>

தேவகோட்டை நகராட்சி பொது சுகாதார பிரிவின் பராமரிப்பில் 10 சமுதாய கழிப்பிடம், 2 பொது கழிப்பிடம் உள்ளது. தற்போது SBM திட்டத்தின் மூலம் ODF + + ஆய்வு மேற்கொள்ள இருப்பதால் அவசர அவசியம் கருதி மராமத்து பணிகள் மற்றும் கழிப்பிடங்களில் உள்ள பொருட்கள் மாற்றித்தருமாறு பொதுசுகாதார பிரிவின் மூலம் கோரப்பட்டுள்ளது. அதனை தொடர்ந்து கீழ்காணும் கழிப்பிடங்கள் மராமத்து பணிகள் மேற்கொள்ள தயார் செய்யப்பட்ட மதிப்பீடு ரூ.10.00 இலட்சத்திற்கு மன்ற முன் அனுமதி வேண்டப்படுகிறது.

1) ராம்நகர் கழிப்பிடம்
2) பேருந்து நிலைய கழிப்பிடம்
3) ஜீவா நகர்
4) காந்தி ரோடு
5) பேருந்து நிலைய சிறுநீர் கழிப்பிடம்
6) முகமதியார் பட்டிணம்

<u>அலுவலக குறிப்பு :–</u>

அ) மன்றம் அனுமதிக்கலாம்.

ஆ) மேற்காணும் பணிக்கான செலவீனத்தை பொதுநிதியில் மேற்கொள்ள மன்றம் அனுமதிக்கலாம்.

இ)) பணியின் அவசரம் அவசியம் கருதி நகர்மன்ற தலைவர் அவர்களிடம் 20.03.2025 ல் முன் அனுமதி பெற்றதை மன்றம் அனுமதிக்கலாம்.

**தீர்மானம் 58 - அனுமதிக்கப்பட்டது .**

––

## பொருள் – 59

தேவகோட்டை நகராட்சி அரசு மருத்துவமனை வளாகத்தில் SBM 2.0 தூய்மை இந்தியா திட்டம் 2024-2025ன் கீழ் புதிதாக பொது கழிப்பிடம் ரூ. 23,00,000/- இலட்சத்திற்கு கட்டிடம் கட்டிட நிர்வாக அனுமதி வழங்கப்பட்டு கீழ்காணும் விபரப்படி நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

| ULB Name | Name of the Hospital / UPHC | GOI Share Rs. in Lakhs Rs. 50% | State Share Rs. in Lakhs 33% | ULB Share Rs. in Lakhs 17% | Permitted Amount Rs. Lakhs |
|---|---|---|---|---|---|
| Devakottai | GH | 11.50 | 7.59 | 3.91 | 23.00 |

மேற்காணும் நிதி ஒதுக்கீட்டின்படி நகராட்சி பொது நிதியிலிருந்து ரூ.3,91,000/- ஐ செலவீனம் மேற்கொள்ள மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலக குறிப்பு :–**

அ) மன்றம் அனுமதிக்கலாம்.

ஆ) மேற்காணும் பணிக்கான செலவீனத்தை பொதுநிதியில் மேற்கொள்ள மன்றம் அனுமதிக்கலாம்.

**தீர்மானம் 59 - அனுமதிக்கப்பட்டது .**

--

## பொருள் – 60

தேவகோட்டை நகராட்சிக்கு சொந்தமான 16-வது தொகுதி நகராட்சி நடுநிலைப்பள்ளி வளாகத்தில் பழைய கட்டிடம் சுமார் 40 ஆண்டுகளுக்கு மேலான நிலையில் இடிந்து விழும் நிலையில் உள்ளது. தற்போது பள்ளியில் ஆசிரியர்களோ மற்றும் மாணவர்களோ யாரும் பயன்படுத்தாத பழைய கட்டிடத்தை இடித்து அப்புறப்படுத்திட மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலக குறிப்பு :–**

அ) மன்றம் அனுமதிக்கலாம்.

**தீர்மானம் 60 - அனுமதிக்கப்பட்டது .**

--

(ஒப்பம்) கா. சுந்தரலிங்கம்
நகர்மன்ற தலைவர்,
தேவகோட்டை நகராட்சி.

**/உண்மை நகல் /**

மேலாளர்,
தேவகோட்டை நகராட்சி